# ஆற்காடு நகராட்சி

## மன்றக் கூட்டப் பொருள்

## 18.06.2018-ம் தேதி முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ள நகரமன்ற சாதாரணக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்.

**பொருள் எண்.01) :-** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இரண்டாம் நிலை சேகரிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் மினிலாரி TN23 L 1039 வாகனத்தில் உள்ள பின்புற பாடி செனல் மற்றும் டிங்கரிங் ஒர்க்ஸ் ஆகியவை பழுது அடைந்து வாகனம் இயக்கும்போது குப்பைகள் ரோட்டில் இருக்கின்றது. எனவே, மேற்படி பிளாட்பார்ம் மாற்ற ஆகும் தோராய செலவினம் ரூ.75000/– க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு :– 1) மன்றம் அனுமதிக்கலாம்,

2) அவசர அவசியம் கருதி பொதுசுகாதாரம் பாதிக்காமல் இருக்க தனி அலுவலர் முன் அனுமதிபெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.02) :-** ஆற்காடு நகராட்சி அலுவலகத்துக்கு தேவையான எழுதுபொருட்கள், படிவங்கள் (ம) பதிவேடுகள் (2018–2019) ஆண்டிற்கு அனைத்து பிரிவுகளுக்கும் வாங்கி வழங்கப்படவேண்டியுள்ளது. இதற்காக NAPCO கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெற்று சப்ளை உத்தரவு வழங்கப்பட்டு பொருட்கள் பெறப்பட்டுள்ளது.

மேற்படி ந.க.1634/2016/பி2 நாள்.11.04.2018 சப்ளை உத்தரவில் குறிப்பிட்டுள்ள 1 முதல் 30 வரையிலுள்ள பொருட்களை வாங்கியமைக்கு தோராய செலவினம் ரூ.4,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான செலவினங்களை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம், மேலும் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று NAPCO கூட்டுறவு நிறுவனத்திற்கு சப்ளை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

அ.கு :– மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.03) :-** ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு பயன்பாட்டில் உள்ள TN73 E 0155 என்ற BOLERO JEEP-க்கு புதிய நான்கு டயர்கள் வாங்க மன்றப் பொருளில் செலவினத்திற்கு நிர்வாக முன் அனுமதி 03.04.2018ம் நாளில் பெறப்பட்டுள்ளது. எனவே, கீழ் காணும் விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விற்பனையாளர் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஆர்.வி.எஸ். வீல்ஸ் மற்றும் டயர்ஸ், ஆற்காடு | 35400/– |
| 2 | வீல்ஸ் மற்றும் டயல்ஸ், வேலூர் | 30000/– |

அ.கு :– 1) கூட்டப்பொருள் ஒப்புதல் வழங்கலாம்.

2) மேற்காணும் பட்டியலில் உள்ள விற்பனையாளரிடம் இருந்து பெறப்பட்ட குறைவான விலைப்புள்ளி வ.எண்.2ல் உள்ள வீல்ஸ் மற்றும் டயர்ஸ், வேலூர் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று புதிய நான்கு டயர்களை வாங்க தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று சப்ளை உத்திரவு அளிக்கப்பட்டுள்ளதற்கும் செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.1017/2018/எச்1

**பொருள் எண்.04) :-** இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பயன்பாட்டில் உள்ள பொளிரோ ஈப்பு எண்.TN73 E 0155 என்ற வாகனம் பழுது ஏற்பட்டதால் அவசர அவசியம் கருதி இதனை உடனடியாக நிவர்த்தி செய்ய வேலூர் பொளிரோ வாகன அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான ஜெயின் கார்ஸ் என்பவரிடம் நிவர்த்தி செய்து கொள்ள தோராய செலவினத் தொகை ரூ.36000/–க்கு மன்றப் பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு :– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி இந்நகராட்சியின் பொளிரோ ஈப்பு TN73 E 0155 என்ற வாகனத்தை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் வேலூர் ஜெயின் கார்ஸ்–ல் உடனடியாக பழுதுகளை நிவர்த்தி செய்ய தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்றமைக்கும் இச்செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.1516/2018/எச்1

**பொருள் எண்.05) :-** ஆற்காடு நகராட்சி வழக்கு எண். O.S No.23/2018 I.A No.85/2018 ஆற்காடு உரிமையியல் நீதிமன்றத்தில் திரு.டி.மலர் ஆற்காடு அவர்கள் நகராட்சி ஆணையாளர் மீது வழக்கு தொடர்ந்துள்ளார். அவ்வழக்கினை நகராட்சி சார்பில் நகராட்சி வழக்கறிஞர் திரு.கே.ஜெய்சங்கர் அவர்கள் ஏற்று வழக்கினை நடத்தி கொண்டு வருகிறார். அதற்கான வழக்கு கட்டணமாக ரூ.5000/– வழங்க 14.05.2018 கடிதம் வழங்கியுள்ளார். அத்தொகையினை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு :– அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.1408/2018/எப்1

**பொருள் எண்.06) :-** ஆற்காடு நகராட்சி வழக்கு – வழக்கு எண். O.S No.22/2018 I.A No.84/2018 ஆற்காடு உரிமையியல் நீதிமன்றத்தில் திரு.கே.திருமுருகன், ஆற்காடு அவர்கள் நகராட்சி ஆணையாளர் மீது வழக்கு தொடர்ந்துள்ள அவ்வழக்கினை நகராட்சி சார்பில் நகராட்சி வழக்கறிஞர் திரு.கே.ஜெய்சங்கர் அவர்கள் வழக்கினை ஏற்று நடத்தி கொண்டு வருகிறார். அதற்கான வழக்கு கட்டணமாக ரூ.5000/– வழங்க 14.05.2018 கடிதம் வழங்கியுள்ளதை தொகை வழங்கிட மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு :– அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.1408/2018/எப்1

**பொருள்எண். 07:-** இந்நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.4ல் அமின்பீரான்தர்கா தெருவில் சிறுபாலம் கட்டுதல் பணிக்கு 29.05.2018 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின் படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | R. ராஜா | 0.42% மதிப்பீட்டினை விட குறைவு |
| 2 | B. ஹயாதி பீ | 1.24% மதிப்பீட்டினை விட அதிகம் |

**அ.கு:-** 1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. R. ராஜா ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.42% குறைவு குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள்எண். 08:-** இந்நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு குடிநீர் திட்டத்தின் கீழ் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.1 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் உள்ள கைபம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்திடவும் 2018–19ம் ஆண்டு பராமரிப்பு பணிக்கு 29.05.2018 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின் படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | K.C. சேகர் | 1.30% மதிப்பீட்டினை விட அதிகம் |
| 2 | N. எழிலன் | 0.06% மதிப்பீட்டினை விட குறைவு |

**அ.கு:-** 1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. N. எழிலன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.06% சதவீதம் குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள்எண். 09:-** இந்நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு குடிநீர் திட்டத்தின் கீழ் ரூ.5.80 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.30 ஏரிக்கீழ் தெரு முதல்முனிசாமிபிள்ளை தெரு வரை உள்ள பகுதிகளில் புதிதாக பகீர்மான குழாய் அமைத்தல் பணிக்கு 29.05.2018 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின் படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | T. முரளிதரன் | 0.04% மதிப்பீட்டினை விட குறைவு |
| 2 | E. குமார் | 0.60% மதிப்பீட்டினை விட அதிகம் |

**அ.கு:-** 1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. T. முரளிதரன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.04% சதவீதம் குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள்எண். 10:-** இந்நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு குடிநீர் திட்டத்தின் கீழ் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண். 1 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் உள்ள சிறுமின் விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்தல் ஆகியவற்றிற்கான ஆண்டு பராமரிப்பு பணிக்கு 29.05.2018 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின் படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | N. எழிலன் | 0.12% மதிப்பீட்டினை விட குறைவு |
| 2 | T. முரளிதரன் | 0.42% மதிப்பீட்டினை விட அதிகம் |

**அ.கு:-** 1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. N. எழிலன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.12% சதவீதம் குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள்எண். 11:-** இந்நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் அண்ணாநகர்–3 மனைப்பிரிவு பூங்கா மற்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பகுதி–2,மேல்நிலை நீர்தேக்க தொட்டி அருகில் மக்கம் குப்பையில் இருந்து உரம் தயாரித்தல் பணிக்கு 29.05.2018 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின் படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | T. முரளிதரன் | 0.60% மதிப்பீட்டினை விட அதிகம் |
| 2 | K.C. சேகர் | 0.10% மதிப்பீட்டினை விட குறைவு |

**அ.கு:-** 1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. K.C. சேகர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.10% சதவீதம் குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள்எண். 12:-** இந்நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் ஜானகிராமன் பூங்கா மற்றும் கன்னியப்பன் பூங்காவில் மக்கும் குப்பையில் இருந்து உரம் தயாரித்திட உரத்தொட்டிகள் அமைத்தல் பணிக்கு 29.05.2018 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின் படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | T. முரளிதரன் | 1.59% மதிப்பீட்டினை விட அதிகம் |
| 2 | R. ராஜா | 0.15% மதிப்பீட்டினை விட குறைவு |

**அ.கு:-** 1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. R. ராஜா ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.15% சதவீதம் குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள்எண். 13:-** இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள தணிக்கை பதிவேடுகள் 10 எண்ணிக்கை நகல் எடுத்து பைண்டிங் செய்து உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, வேலூர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் நான்கு பதிவேடுகள் நகல் எடுத்து பைண்டிங் செய்து ஆகமொத்தம் 14 பதிவேடுகள் – 1196 பக்கங்கள் கொண்ட செலவின தொகை ரூ.3092/–ஐ ஜெயம் பிரஸ் நிறுவனம், ஆற்காடு அவர்களுக்கு வழங்கலாம் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணிகள் செய்து முடித்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அ.கு:-** அனுமதிக்கலாம்.

**பொருள்எண். 14:-** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் கல்லூரிகள், பள்ளிகள், திருமண மண்டபங்கள், தொழிற்சாலைகள், திரையரங்குகள், மதுபானக் கடைகள், தங்கும் விடுதிகள், வங்கிகள், வணிகம் சார்ந்த கடைகள், அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்கள், அரசு சார்ந்த மற்றும் அரசு சாராத நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை தொழில் வரியை 35 சதவிகிதத்திற்கு மிகாமலும், 25 சதவிகிதத்திற்கு குறையாமலும், உயர்த்தி கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12503/2018/ஆர் நாள் 21.05.2018ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தொழில்வரி உயர்வு செய்து நிர்ணயம் செய்யவும் 01.10.2018 முதல் அமலாக்கம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | அரையாண்டு வருமானம் | ஏற்கனவே 01.01.2013ல் முதல் உள்ள அரையாண்டு தொழில் வரி தொகை ரூ. | 01.10.2018 முதல் திருத்திய அரையாண்டு தொழில்வரி தொகை ரூ. (25 சதவீதம்) |
|---|---|---|---|
| 1 | ரூ. 21000/– வரை | இல்லை | இல்லை |
| 2 | ரூ.21000/– முதல் ரூ.30000/– வரை | ரூ.118/– | ரூ.148/– |
| 3 | ரூ.30001/– முதல் ரூ.45000/– வரை | ரூ.298/– | ரூ.373/– |
| 4 | ரூ.45001/– முதல் 60000/– வரை | ரூ.586/– | ரூ.733/– |
| 5 | ரூ.60001/– முதல் 75000/– வரை | ரூ.883/– | ரூ.1104/– |
| 6 | ரூ. 75001/–க்கு மேல் | ரூ.1173/– | ரூ.1250/– |

மேற்படி, 25 சதவீதம் தொழில்வரி உயர்வுசெய்யும்போது, Article 276, clause (2) Constitution of India-ல், ஒருநபரால் செலுத்தப்படும் தொழில்வரியானது ஆண்டுக்கு ரூ.2500/–க்கு மிகாமல் இருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொழில்வரி 25 சதவீதம் உயர்வு செய்யப்பட்ட பட்டியலில் வரிசை எண்.6ல் குறிப்பிட்டுள்ள அரையாண்டு தொழில்வரி உயர்வுத் தொகை ரூ.1466/–ஐ ரூ.1250/– ஆக நிர்ணயம் செய்யப்படுகிறது.

அ.கு:– மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1796/2018/அ1

**பொருள்எண். 15:-** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் ஓட்டுநராக பணிபுரியும் திரு.எம்.நரசிம்மன், என்பவர் அலுவல் சாரா வழக்கிற்காக ராணிப்பேட்டை காவல் நிலையத்தில் வழக்கு தொடரப்பட்டு, JM நீதித்துறை நடுவர் அவர்களின் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இதன்படி துறைபூர்வ நடவடிக்கை விதிகளின்படி எடுப்பது அவசியமானது என்பதால் நகரமன்ற வழக்கறிஞர் மற்றும் சட்ட ஆலோசகர் ஆற்காடு அவர்களின் 04.09.2014 ந் தேதி சட்டக்கருத்துருவின் அடிப்படையில், இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகளின்படி திரு.எம்.நரசிம்மன், ஓட்டுநரை, 25.09.2014 பிற்பகல் முதல் அன்னாரின் மீது பிறப்பிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிலுவையில் வைத்து தற்காலிக பணி நீக்கம் செய்து உத்திரவிடப்பட்டது. தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்ட ஆறு மாதங்கள் வரை 50% பிழைப்பூதியமும், ஆறாவது மாதத்திலிருந்து தற்போது வரை 75% பிழைப்பூதியமும் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் திரு.நரசிம்மன், தனது தற்காலிக பணி நீக்கத்தினை ரத்து செய்து , மீண்டும் பணி வழங்க கோரியும் திரு.எம்.நரசிம்மன், ஓட்டுநரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. (W.P.No. 17171 / 2017) மேற்படி வழக்கில் நகராட்சி ஆணையர் ஆற்காடு அவர்களை முதல் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. இதன்படி சென்னை உயர்நீதிமன்றத்தின் W.P.No. 17171 / 2017 நாள்.06.07.2017 வழக்கின் தீர்ப்பாணையின்படி திரு.எம்.நரசிம்மன் ஓட்டுநரின் பணிநீக்க உத்தரவு தொடர்பாக, துறை ரீதியாக எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக, திரு.எம்.நரசிம்மன், ஓட்டுநர் (துபநீ) அவர்களின் மீது பிறப்பிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் மீது ஆறு மாதங்களுக்குள் இறுதி ஆணை பிறப்பிக்ககுமாறு ஆணையிடப்பட்டது.

மேற்படி நீதிமன்ற உத்திரவிற்கிணங்க, இந்நகராட்சியின் நகரமைப்பு அலுவலரை விசாரணை அலுவலராக நியமித்து 10.01.2018 அன்று விசாரணை மேற்கொண்டு விசாரணை அறிக்கை பெறப்பட்டது. இவ்வறிக்கையில் திரு.எம்.நரசிம்மன் (குபநீ) என்பவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள், நிருபணமாகிறது என விசாரணை அலுவலரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி நிருபணமான குற்றச்சாட்டுக்களுக்கு தண்டணையாக திரு.எம்.நரசிம்மன், ஓட்டுநரின் அடுத்த ஊதிய உயர்வினை மூன்று மாதங்களுக்கு திரண்ட பயனின்றி (without Cumulative Effect) நிறுத்தம் செய்தும் 29.01.2018 ஆம் தேதிய ஆணையர் அவர்களின் செயல்முறைகளின்படி இறுதி உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

இப்பொருள் தொடர்பாக மேல்நடவடிக்கை தொடர்வது குறித்து சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு.B.ஆனந்த் அவர்களின் 30.01.2018 அன்று சட்ட கருத்துருவும் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற அரசு உரிமையியல் வழக்கறிஞரிடமும் (Government pleader) சட்டக்கருத்துரு பெறப்பட்டுள்ளது.

வழக்கறிஞரின் சட்டக்கருத்துரு மற்றும் உயர்நீதிமன்ற ஆணையின்படி, விசாரணை முடிவு பெற்று இறுதி ஆணை வழங்கப்பட்ட நிலையில், திரு.எம்.நரசிம்மன் ஓட்டுநரை பணியில் சேர அனுமதிப்பது தொடர்பாக தக்க தெளிவுரை வழங்கிட இவ்வலுவலக ந.க.எண். 3646/2012/சி1 எண்ணிட்ட 24.04.2018 ஆம் தேதிய கடிதத்தின் மூலம், "திரு.எம்.நரசிம்மன், ஓட்டுநரின் (தற்காலிக பணி நீக்கம்) உட்படுத்திட ஏற்கனவே மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் ஆற்காடு நீதிமன்ற C.C.No. 39 of 2014 வழக்கு நடைபெற்று வருகிறபடியால், வழக்கின் விசாரணைக்கு குந்தகம் விளைவிக்காத வகையிலும் இவ்வழக்கின் மீது எதிர்வரும் இறுதி தீர்ப்பில் தெரிவிக்கப்படும் உத்திரவினை ஏற்றுக்கொள்வதாகவும், துறைபூர்வ நடவடிக்கைகளுக்கு கட்டுப்படுவதாகவும், நிர்வாகம் எடுக்கும் முடிவிற்கு சம்மதம் தெரிவிப்பதாகவும், மற்றும் எதிர்வரும் தணிக்கை தடை ஆட்சேபணைக்குட்பட்டு, திரு. M.நரசிம்மன், ஓட்டுநர் (தற்காலிக பணி நீக்கம்) என்பவர் மேற்படி நிபந்தனைகளை தான் ஏற்றுக்கொள்வதாக உறுதி அளித்து கையொப்பமிட்டு வழங்கினால் பணியில் சேர்த்து கொள்ளலாமா" என்பதற்கு தக்க தெளிவுரை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை இவ்வலுவலக கடிதத்தின் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டதற்கு, நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்கள் தனது ந.க.எண்.33732/2016/ஜே4 எண்ணிட்ட நாள். 30.04.2018 கடிதத்தில் ஓட்டுநர் பணியிடத்திற்கு பணி நியமன அலுவலர் நகராட்சி ஆணையரே ஆவார் எனவும் மேலும் அரசு வழக்கறிஞர் (Government Pleader) வழங்கியுள்ள சட்ட கருத்துரை மற்றும் அரசு விதிமுறைகளின்படி தனியரை தற்காலிக பணி நீக்கத்திலிருந்து விடுவித்து மீண்டும் பணியிடம் வழங்குவது தொடர்பாக நகராட்சி ஆணையர் அளவிலேயே முடிவு செய்து கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இப்பொருள் தொடர்பாக பொதுசுகாதாரப்பிரிவு துறை சார்ந்த துப்புரவு அலுவலரின் குறிப்புரை கோரப்பட்டதில் இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவிற்கு தோற்றுவிக்கப்பட்ட ஓட்டுநர் பணியிடங்கள் 4 , என்றும் இப்பணியிடங்களில் தற்போது 3 ஓட்டுநர்களை கொண்டு பொது சுகாதாரப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு ஓட்டுநர் பணியிடத்தில் திரு.மு.நரசிம்மன் என்பவர் துறைபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார் எனவும், இந்நகராட்சியில் மினி லாரிகள் -3, டம்பர் பிளேசர் லாரி -1, ஆட்டோக்கள்-3 ஆக மொத்தம் 7 வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளது எனவும், இந்நகராட்சியில் பொது சுகாதார நிர்வாக மேலாண்மை மற்றும் பணிகளை மேம்படுத்த விதமாக நகராட்சியில் பணியாற்றும் ஓட்டுநர்கள் தற்போது உள்ள 3 நபர்களை (ஓட்டுநர்கள்) மூன்று வாகனங்களுக்கும் மீதமுள்ள 4 வாகனங்களுக்கு இந்நகராட்சியில் பணியாற்றும் ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள துப்புரவு பணியாளர்களை கொண்டு வாகனங்கள் இயக்கப்பட்டு வருகிறது. இதனால் துப்புரவு பணியாளர்களின் தன்

சார்ந்த பணியினை செய்ய இயலாத நிலையில் உள்ளது என்றும், தற்போது இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம், திடக்கழிவு மேலாண்மை திட்டம், கசடு கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் இதர பொது சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் தெரிவித்து, திரு. மு.நரசிம்மன், அவர்களின் வழக்கு, துறை சாரா வழக்காக உள்ளது என தெரிய வருவதாலும், பொது சுகாதாரப்பணிகனின் அவசியம் கருதியும், பொது சுகாதார நிர்வாக நலன் கருதி திரு.மு.நரசிம்மன் அவர்களை ஆணையரால் தெரிவிக்கப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஆணையரின் ஒப்புதலின்படி சம்மந்தப்பட்ட நபரான திரு.மு.நரசிம்மன், அவர்களிடம் இருந்து உறுதிமொழி ஆவணம் மற்றும் சம்மதக்கடிதம் பெற்று பணியில் சேர அனுமதிக்கலாம் என பரிந்துரை குறிப்பு வழங்கியுள்ளார்.

திரு.எம்.நரசிம்மன், ஓட்டுநர் தனது 05.06.2018 ந் தேதிய விண்ணபத்தில் தனது பிள்ளைகள் இருசக்கரவாகனத்தில் சென்று விபத்து ஏற்பட்டு, அதில் ஒரு மகன் சம்பவ இடத்திலேயே உயிழிந்தார். இன்னொருவர் பலத்த காயம் ஏற்பட்டு மன்டையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, வேலூர் C.M.C மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் தனது மனைவிக்கு குடல்புண் (அப்பன்டிக்ஸ்) அறுவை சிகிச்சை செய்ய வேண்டியும், மற்றும் பிள்ளைகளின் படிப்பு செலவு மேற்கொள்ள இயலாமல் பாதிக்கும் நிலையில் உள்ளதாகவும், குடும்பம் பொருளாதாரத்தில் மிகவும் நலிந்து , குடும்ப வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

துப்புரவு அலுவலரின் 23.05.2018 ந் தேதிய குறிப்பின்படியும், நகராட்சி நிர்வாக நலன் கருதி, திரு.எம்.நரசிம்மன் ஓட்டுநரின் குடும்ப சூழ்நிலை கருதியும் மனிதாபிமான அடிப்படையில் அன்னாரின் தற்காலிக பணி நீக்க காலத்திலிருந்து விடுவித்து மீண்டும் பணியில் சேர அனுமதி உத்திரவு வழங்கிடவும் மேலும் அரசு விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொண்டு இந்நகராட்சியில் ஓட்டுநராகப் பணியில் சேர மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பணியின் கீழ் அனுமதிக்கப்பட்ட ஓட்டுநர் பணியிடம் 4 ல் தற்போது மூன்று ஓட்டுநர்கள் மட்டும் பணியாற்றி வருகிறார்கள். மேலும் தற்போது பொது சுகாதரா பிரிவில் பல்வேறு திட்டப் பணிகள் செயல்பட்டு வருவதுடன், துப்புரவு அலுவலரின் பரிந்துரையினை ஏற்றும், மேலும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் ந,க.எண்.33732/2016/ஜே4 எண்ணிட்ட நாள்.30.04.2018 ஆம் தேதிய கடிதத்தின்படியும் , திரு.எம்.நரசிம்மன் அவர்களை உட்படுத்தி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் ஆற்காட்டில் நடைபெற்று வரும் C.C.No. 39 of 2014 வழக்கின் எதிர்வரும் தீர்ப்பிற்கு கட்டுபடுவதாகவும், நகராட்சி நிர்வாகத்துறையால் எடுக்கப்படும் நடவடிக்கைக்கு உட்படுவதாகவும், தெரிவித்து திரு.எம்.நரசிம்மன் அவர்களின் உறுதிமொழி ஆவணம் எழுதி சமர்ப்பித்துள்ளதின் அடிப்படையிலும், மேற்படியாளரின் மீதுள்ள வழக்கு துறை சாரா வழக்கு என்பதாலும், நகராட்சி நிர்வாக துறைக்கு எவ்வித நிதி இழப்பும் இல்லாததாலும், நகராட்சியில் மேற்படியாளர் பணி ஏதும் செய்யாமல் பிழைப்பூதியம் மட்டும் வழங்கப்பட்டு வரும் நிலையில், திரு.எம்.நரசிம்மன் ஓட்டுநர், 05.06.2018 ந் தேதிய கடிதத்தில் தனது குடும்பம் மிகவும் பாதிப்பு அடைந்துள்ளதாகவும், வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதினை, மனிதாபிமான அடிப்படையில் ஏற்றுக்கொண்டும், இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் பொது சுகாதார பணிகள் மேம்படுத்திடவும், நிர்வாக நலனை கருதி அன்னாரை தற்காலிக பணிநீக்க காலத்திலிருந்து விடுவித்து மீண்டும் பணியில் சேர அனுமதி உத்திரவு வழங்கிடவும் மேலும் அரசு விதிமுறைகளின்படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும், மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3646 /2012/சி1**

**பொருள்எண். 16:-** ஆற்காடு நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி 30 வார்டுகளில் மூன்று மகளிர் குழுக்களின் 30 பணியாளர்களை கொண்டு டெங்கு கொசு புழு பணியினை வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேரடி அறிவுரைகளின் படி ஜீலை 2018 முதல் அக்டோபர் 2018ம் வரை நான்கு மாதங்களுக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள தோராய செலவினத் தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரைகளின் படியும் இந்நகர 30 வார்டுகளில் டெங்கு கொசு புழுக்களை ஒழிக்க மூன்று மகளிர் குழுக்களின் 30 பணியாளர்களைகொண்டு நான்கு மாதங்களுக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் அனுமதி அளித்தமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) மேற்படி மூன்று மகளிர் குழுக்களின் 30 பணியாளர்களுக்கு மாத ஊதியத்தினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.2600/2015/எச்1

**பொருள் எண்.17) :-** அரசாணை (நிலை) எண்.97, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.12.07.2007 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்.748/2008/கு.வ.2 நாள்.21.09.2009–ன் படி புதிய குடிநீர் இணைப்பு வழங்கும்போது சாலை துண்டிப்பு கட்டணமாக கீழ்காணும் விவரப்படி வசூல் செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

| நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் | கருங்கல்லி சல்லி சாலை ரூ. | தார் சாலை ரூ. | சிமெண்ட் சாலை ரூ. |
|---|---|---|---|
| 0–30 மீட்டர் நீளத்திற்கு | 1050 | 2250 | 2600 |
| 30–90 மீட்டர் நீளத்திற்கு | 1650 | 2850 | 3200 |

மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதத்தில் ஒவ்வொரு வருடமும் 2009–10க்கு பிறகு ஏப்ரல் மாதம் முதல்5 சதவீதம் கூடுதலாக வசூலிக்கப்பட வேண்டும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் படி 2010–11 முதல் தற்போது வரை புதிய குடிநீர் இணைப்பு வழங்கும்போது சாலை துண்டிப்பு கட்டணமாக கீழ்காணும் விவரப்படி வசூல் செய்யப்பட்டு வருகிறது.

| நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் | கருங்கல்லி சல்லி சாலை ரூ. | தார் சாலை ரூ | சிமெண்ட் சாலை ரூ. |
|---|---|---|---|
| 0–30 மீட்டர் நீளத்திற்கு | 1110 | 2370 | 2730 |
| 30–90 மீட்டர் நீளத்திற்கு | 1740 | 3000 | 3360 |

மேற்கண்டவாறு வசூல் செய்யப்படும் சாலை துண்டிப்பு கட்டணம் 2010–11 முதல் வருடந்தோறும் 5 சதவீதம் கூடுதலாக உயர்த்தி வசூலிக்காமல் பழைய சாலை துண்டிப்பு கட்டணத்தையே வசூலிக்கப்பட்டு வருவதாக தணிக்கையில் தடை எழுப்பப்பட்டுள்ளது. எனவே, நிர்வாக நலன் கருதி 2010–11 முதல் நடப்பு ஆண்டு 2018–19 வரைஉள்ள இடைப்பட்ட ஆண்டுகளுக்கு வருடந்தோறும் 5 சதவீதம் கூடுதலாக உயர்த்தி கீழ்கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சாலை துண்டிப்பு கட்டணத்தை 2018–19ம் ஆண்டு முதல் உயர்த்தி வசூலித்திட மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் | கருங்கல்லி சல்லி சாலை ரூ. | தார் சாலை ரூ | சிமெண்ட் சாலை ரூ. |
|---|---|---|---|
| 0–30 மீட்டர் நீளத்திற்கு | 1639 | 3502 | 4034 |
| 30–90 மீட்டர் நீளத்திற்கு | 2571 | 4432 | 4962 |

அ.கு :– 1) மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள்எண். 18:-** இந்நகரமன்றத் தீர்மானம் எண்.104, நாள்.30.04.2018ல் அனுமதியளிக்கப்பட்டதினை தொடர்ந்து வார்டு 9, கோட்டைமேட்டுத் தெருவில் உள்ள நகராட்சி உரக்கிடங்கில் Bio mining முறையில் குப்பைகளை பிரித்தெடுத்து Volumetric Test செய்து அறிக்கை தயாரிக்கும் பணியினை மேற்கொள்வதற்கு விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விகிதம் ரூ |
|---|---|---|
| 1 | Gridline surveys and Geospatial Pvt Ltd,<br>Plot No1. Bhomadevi Nagar,<br>Gerugambakkam, Chennai | ரூ.45000/– |
| 2 | Orient surveys,<br>Engineering & Topo Mapping<br>79/6, Saidapet,Chennai | ரூ.48000/– |
| 3 | M/s. JP Surveys, Consultants,<br>7th mainroad, santhi colony,<br>Anna nagar, Chennai | ரூ.51000/– |

அ.கு:– 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள Gridline surveys and Geospatial Pvt Ltd, நிறுவனத்திற்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.1796/2018/அ1

**பொருள்எண். 19:-** இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள UPS பழுதடைந்துள்ளதால் கணினிகள் பராமரிப்பினை கருத்தில் கொண்டு மேற்கண்டவாறு UPS சிஸ்டத்திலுள்ள பேட்டரி மற்றும் உதிரிமின் பொருட்களை மாற்றி அமைத்து பொருத்திடும் பணி மேற்கொள்வதற்கா தோராய செலவினம் ரூ.10,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள்எண். 20:-** இந்நகராட்சியின் புதிய அலுவலக கட்டிடத்தில் உள்ள Lift இயந்திரம் அடிக்கடி பழுதாவதால் அதனை உடனுக்குடன் ரிப்பேர் சரிசெய்திடவும் 2018–19ம் ஆண்டுக்கு பழுது பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கான தோராய செலவினம் ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) இப்பணிக்கான செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையரின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள்எண். 21:-** இந்நகராட்சியின் புதிய அலுவலக கட்டிடத்தில் உள்ள Lift இயந்திரம் ஆண்டு பழுது பராமரிப்பு (2018–19) பணிக்கு அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விகிதம் ரூ (ஒரு வருடம் 365 நாட்கள்) |
|---|---|---|
| 1 | National Elevator,<br>2nd cross street, Shanthi nagar,<br>Palayankottai, Thiruvenlveli | ரூ.48500/– |
| 2 | KPS Elvators,<br>120A, Nehru Nagar, Vengamedu, Karur | ரூ.49500/– |
| 3 | RR Elevator,<br>12, Periya Kalanikat street,<br>Velapadi, Vellore | ரூ.51000/– |

அ.கு:– 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள National Elevator நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்0புதல் வழங்கலாம்.

ந.க.எண்.1796/2018/அ1.

**பொருள்எண். 22:-** ஆற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 55917 மக்கள்தொகை மற்றும் இந்நகருக்கு வந்து செல்லும் மக்கள் (Floating Population) தொகையால் இந்நகரில் தினமும் சுமார் 19 மெட்ரிக் டன் அளவிற்கு திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இத்திடக்கழிவுகள் தற்பொழுது கோட்டை காலனி பகுதியில் உள்ள உரக்கிடங்கில் ( சுமார் 1 .72 ஏக்கர்) கொட்டப்பட்டு வருகிறது. தற்பொழுது நகராட்சியில் உள்ள 35 தள்ளுவண்டிகள், மூன்று ஆட்டோக்கள் மூலம் சுமார் 33 % வீடுகளில் திடக்கழிவுகள் மக்கும் மக்காத குப்பைகள் எனப்பிரித்து வாங்கப்படுகிறது. நகரில் உருவாகும் திடக்கழிவுகளில் எரியக்கூடிய தன்மையுடைய சுமார் 2 மெட்ரிக் டன் (10 விழுக்காடு) திடக்கழிவுகளான பிளாஸ்டிக், ரப்பர், பிளாஸ்டிக் பாட்டில்கள், துணிகள், தேங்காய் ஓடுகள் மற்றும் மரங்கள் ஆகியவற்றினை கையாளுவதிலும் மேலும் அப்புறப்படுத்துவதிலும் சிரமங்கள் ஏற்படுகின்றன. இவற்றினை பாதுகாப்பாக கையாண்டு வெளியேற்றுவதற்கான வழிமுறைகள் குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 11.05.2018 அன்று நடைபெற்ற ஆய்வுகூட்டத்தில் ஆலோசித்தபோது மேற்கண்ட எரியக்கூடிய தன்மை வாய்ந்த திடக்கழிவுகளை கடலூர் மாவட்டத்தில் உள்ள 5 நகராட்சிகளும் ( கடலூர், பண்ருட்டி, நெல்லிக்குப்பம், சிதம்பரம் மற்றும் விருத்தாச்சலம் ) அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் தொழிற்சாலையில் எரிபொருளாக பயன்படுத்துவதற்காக வழங்குவதால் அந்நிறுவனத்துடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கலாம் எனத்தெரிவித்ததை தொடர்ந்து மேற்கண்ட சிமெண்ட் தொழிற்சாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு பேசியபோது நாளொன்றுக்கு 250 மெட்ரிக் டன் எரியக்கூடிய திடக்கழிவுகளை கையாளக்கூடிய அளவில் தங்களிடம் திறன் இருப்பதாகவும் இதுசம்பந்தமாக அந்நிறுவனத்துடன் 10 ஆண்டுகாலத்திற்கு எரியக்கூடிய திடக்கழிவுகளை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட நகராட்சி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டால் திடக்கழிவுகளை நகராட்சியின் செலவில் நகராட்சி வாகனங்களில் ஏற்றி அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் தொழிற்சாலையில் வந்து தர வேண்டும் எனவும் மேற்கண்ட எரியக்கூடிய திடக்கழிவுகளை நகராட்சி இலவசமாக தரவேண்டும் எனவும் நிபந்தனை தெரிவித்தனர். இதுசம்பந்தமான மாதிரி புரிந்துணர்வு ஒப்பந்த உடன்படிக்கையும் கொடுத்துள்ளனர்.

ஆற்காடு நகராட்சியில் நாளொன்றுக்கு உற்பத்தியாகும் திடக்கழிவுகளில் எரியக்கூடிய தன்மையுடைய 2 மெ.டன் திடக்கழிவுளை கையாளுவதும் அவற்றினை பாதுகாப்பாக வெளியேற்றுவதிலும் பல்வேறு சிரமங்கள் உள்ளன. எனவே அவற்றினை பாதுகாப்பாக வெளியேற்றிட மேற்கண்ட சிமெண்ட் தொழிற்சாலை நிறுவனத்துடன் 10 ஆண்டுகாலத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம்

செய்து கொள்ளவும் அதற்காக விலையேதும் இல்லாமல் இலவசமாக இத்திடக்கழிவுகளை நகராட்சி சொந்த பொறுப்பில் இந்நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:– 1) ஆற்காடு நகராட்சியில் நாளொன்றுக்கு உற்பத்தியாகும் எரியக்கூடிய தன்மையுள்ள திடக்கழிவுகளை கையாளுவதிலும் மற்றும் பாதுகாப்பாக வெளியேற்றுவதிலும் உள்ள சிரமங்களை கருத்தில் கொண்டு அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு விலையேதும் இல்லாமல் இலவசமாக இத்திடக்கழிவுகளை நகராட்சி வாகனத்தில் கொண்டு சென்று வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

2) பத்தாண்டு காலத்திற்கு அல்ட்ராடெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு திடக்கழிவுகளை வழங்குவதற்கு அந்நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1420 / 2018 /எச்1**

**ஆற்காடு** **தனி அலுவலர்,**
**நாள்: 18 .06.2018** **ஆற்காடு நகராட்சி.**